# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 14.04.2021 supeedsam.com supeedsam@gmail.com







## எந்த அரசியல்வாதிக்கும் ஹிட்லர் முன்மாதிரியில்லை

### திலும் அமுனுகமவின் கருத்துக்கு ஜேர்மன் தூதுவர் பதில்

(ராஜ்)

மில்லியன் கணக்கானவர்களின் இறப்புகளிற்கும் மனித துயரங்களிற்கும் காரணமாக விளங்கியவர் ஹிட்லர். அவர் அரசியல்வாதிகளிற்கான முன்னுதாரணமானவர் இல்லை என இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் ஹோல்ஹெர் சூபேர்ட் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஹிட்லராக மாறும் சாத்தியக்கூறுகள் குறித்து இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து குறித்து டுவிட்டரில் பதிவு செய்துள்ள கருத்திலேயே தூதுவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து தெரிவித்துள்ளதாவது;

ஹிட்லர் ஒருவர் காணப்பட்டால் அது இலங்கைக்கு நன்மை பயக்கும் விடயம் என தெரிவிக்கப்படுவதை அறிந்துள்ளேன்.

இவ்வாறு கருத்து தெரிவிப்பவர்களிற்கு

02 ஆம் பக்கத்தில்...

## ஆறு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

(காந்தன்)

நாட்டில் வடக்கு உட்பட ஆறு மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மத்திய மாகாணம், சப்ரகமுவ, மேல் மாகாணம், வடமேல் மாகாணம், வடமாகாணம் காலி, மாத்தறை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்

02 ஆம் பக்கத்தில்...

## ஈழத்தை ஏன் பயன்படுத்துகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும்

### அரசாங்கத்துக்கு முன்னிலை சோசலிச கட்சி பதிலடி

(ஊர்காவலன்)

முஸ்லிம் விவாக சட்டடம், ஈழம் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்திய தேசியவாதிகள் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிராக மௌனம் காப்பது வேடிக்கையானது என்று முன்னிலை சோசலிச கட்சியின் ஒருங்கிணைப்பாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



கொவிட் 19 நிலமை காரணமாக அரசாங்கத்தினால் வழங்கப்படும் 3ம்கட்ட கொடுப்பனவான 5000 ரூபாவினை ஏறாவூர் மிச் நகரில் வசிக்கும் 104 வயதுடைய தாயொருவர் நேற்று பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதை இங்கு காணலாம்.

## இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி விநியோகம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி

(கிரிதிசன்)

கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் அனைவருக்கும் நியாயமான முறையில் கிடைப்பதை உறுதி செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பலவீனமான நிலையில் உள்ள மக்கள் தடுப்பூசி வழங்கப்படுவதிலிருந்து விலக்கி வைக்கப்படும் நிலை உருவாவதற்கு தென்னாசிய அரசாங்கம் அனுமதிக்க கூடாது என சர்வதேச

02 ஆம் பக்கத்தில்...

## சுமந்திரனைக் கொல்லச் சதித்திட்டம்

### 11 சந்தேக நபர்கள் விடுதலை!

(ராஜ்)

எம்.ஏ.சுமந்திரனைக் கொல்லச் சதித்திட்டத்தில் ஈடுபட்டமை மற்றும் ஆயுத வர்த்தகம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டிருந்த பிரபல குற்றக் கும்பல் உறுப்பினர் கனேமுல்ல சஞ்ஜீவ உள்ளிட்ட 11 சந்தேக நபர்கள் கொழும்பு பிரதான

02 ஆம் பக்கத்தில்...


## இலங்கையில் 11 பயங்கரவாத குழுக்கள் தடை:

### தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

இலங்கையில் தீவிரவாத செயற்பாடுகளுக்கான தடைகளை தொடர்ந்து சர்வதேச வருகை மற்றும் தமிழ் நாட்டின் கடலோர மாவட்டங்களில் உள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அல்கொய்தா மற்றும் ஐ.எஸ். உட்பட 11 பயங்கரவாத

02 ஆம் பக்கத்தில்...






## இணையம் ஊடாக பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு எச்சரிக்கை

இணையத்தில் விற்பனையாகும் பல பொருட்கள் யாரோ ஒரு நபரால் திருடப்பட்டது அல்லது கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...











## அசேல சம்பத் கைது

(கிருபை)

மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் செயற்பாட்டாளர் அசேல சம்பத் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பன்னிபிட்டிய பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கொம்பனித் தெரு பொலிஸாரால் கைது செய்

02 ஆம் பக்கத்தில்...






## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



சித்தாண்டி பிரதான வீதியிலுள்ள நித்தியானந்தன் புவனலோஜினி குடும்பத்தின் அன்பு மகள் சதுஸ்ரிக்கா இரண்டாவது பிறந்தநாளை சிறப்பான முறையில் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (11.04.2021) சிறப்பாக கொண்டாடினார்.

சதுஸ்ரிக்காவின் பிறந்தநாள் வாழ்த்துக்களை அப்பம்மா சரஸ்வதி, அப்பப்பா நல்லதம்பி, அம்மம்மா சரஸ்வதி, அப்பப்பா சிவநாதன், அத்தை சறோஜினிதேவி டினுக்சியா குடும்பம், ரசிதரன் குடும்பம், சிறிதர் குடும்பம், புலேந்திரன் குடும்பம், பகிதரன் பிரேமச்சந்திரன் மாமா அனைவரும் எல்லாம் வல்ல சித்தண்டி முருகப்பெருமான் அருளால் தேக ஆரோக்கியத்துடனும் பல்கலையும் கற்று தரணியில் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்தி மகிழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினம் பொலன்னறுவையில்

ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர, முக்கிய அரசியல் கட்சிகள் இந்த ஆண்டு மே தின பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்த முடிவு செய்துள்ளன. அனைத்து அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் கொழும்பில் மே தின பேரணியை நடத்த பொதுஜன பெரமுன தயாராகி வருகிறது. இது தொடர்பாக இறுதி முடிவு 19 ஆம் தேதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள கட்சி தலைமைக் கூட்டத்தில் எடுக்கப்படும். இருப்பினும், அரசாங்கத்தின் பங்காளியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது மே தின பேரணியை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலன்னறுவையில் நடத்த முடிவு செய்துள்ளது.

பொலன்னருவாவில் நடைபெறும் மே தின பேரணியில் கூட்டுச்சேர அரசு ஆதரவாகச்செயற்படும் 11 கூட்டுக் கட்சிகள் தயாராகி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின பேரணி பொரளை காம்ப்பெல் பூங்காவில் நடைபெற உள்ளது. பிரேமதாச நினைவு தினமும் ஒரே நேரத்தில் நடைபெறும். சிறிகோதா கட்சி தலைமையகத்தில் மே தினத்தை எளிமையாக கொண்டாட ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

கோவிட் 19 தொற்றுநோய் இன்னும் முடிவடையாத நேரத்தில் கொழும்புக்கு மக்களை அழைத்து வந்து பாதுகாப்பற்றவர்களாக மாற்ற எந்த திட்டமும் இல்லை என்று கட்சித் தலைவர் ரனில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# எல்.ரீ.ரீ.ஈ.க்கு புத்துயிர் அளிக்க கொழும்பு மேயர் முயன்றதாக நாங்கள் குற்றம் சாட்டப் போகிறோமா?

### மங்கள சமரவீர கேள்வி

எல்.ரீ.ரீ.ஈ.க்கு புத்துயிர் அளிக்க கொழும்பு மேயர் முயன்றதாக நாங்கள் குற்றம் சாட்டப் போகிறோமா? என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனது ருவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மேயர் தனது நகராட்சி மன்றத்தின் பாதுகாப்பு அணிந்திருந்த சீருடைகளை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார்; கொழும்பு நகராட்சியின் பாதுகாப்பால் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான சீருடைகள் அணியப்படுகின்றன. எல்.ரீ.ரீ.ஈ.க்கு புத்துயிர் அளிக்க கொழும்பு மேயர் முயன்றதாக நாங்கள் குற்றம் சாட்டப் போகிறோமா? என தெரிவித்துள்ளார்.

## சீன பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகிறார்



சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங்கே உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் அவர்இலங்கைவரவுள்ளதாகஇலங்கை வெளிவிவகாரஅமைச்சுதகவல்கள்தெரிவிக்கின்றன. இந்த விஜயத்தின் போது சீன பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்திக்கவுள்ளார். கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர், சீனாவின் உயர்மட்ட அதிகாரியொருவர் இலங்கை வரும் முதலாவது சந்தர்ப்பமாக இது அமையவுள்ளது. இதற்கு முன்னர் கடந்த ஒக்டோபர் மாதத்தில் சீனாவின் இராஜதந்திரிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில், அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் இங்கு வரவுள்ளார்.

இதே வேளை சீன பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயத்தின் பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சீனாவுக்கு பயணமாக உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## அசேல சம்பத் கைது

யப்பட்டுள்ளார். நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளின் கடமைகளுக்கு தொந்தரவு விளைவித்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற மேற்படி சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளுக்கு ஆஜராகாத காரணத்தினால், அசேல சம்பத் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மையில் விநியோகிக்கப்பட்ட சதொச நிவாரண பொதி தொடர்பில் போலி தகவல்களைப் பரப்பியதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, இவருக்கு எதிராக சிஐடியில் முறைப்பாடு செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## இணையம் ஊடாக பொருட்கள் கொள்வனவு

திருடப்பட்ட பெறுமதியான கையடக்க தொலைபேசி, தங்க நகைகள், வாசனை திரவியங்கள், கண்ணாடி உபகரணங்கள் ஆகியவை குறைந்த விலையில் வழங்குவதாக இணையத்தளம் அல்லது சமூக வலைத்தளங்கள் ஊடாக விளம்பரங்கள் வெளியிட்டு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த நிறுவனங்களின் பொருட்கள் விற்பனை செய்யும் நபர்கள் மக்கள் நடமாட்டம் குறைவான மற்றும் சீசீடீவி கட்டமைப்புகள் இல்லாத இடங்களை தெரிவு செய்துக் கொள்கின்றனர்.அங்கு அவர்கள் பொருட்களை விற்பனை செய்தவுடன் காணாமல் போய்விடுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனால் இணையத்தளம் ஊடாக பொருட்கள் கொள்வனவு செய்யும் போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## இலங்கையில் 11 பயங்கரவாத குழுக்கள் தடை:

குழுக்களை தடை செய்யும் நடவடிக்கையை இலங்கை ஆரம்பித்த நிலையில் இந்த அச்சுறுத்தல் உணரப்பட்டதாக திஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் குறித்த தடையை அடுத்து ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பாக அனைத்து மாநில ஆணையர்கள் மற்றும் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து மத அடிப்படைவாதிகள் விமானம் அல்லது கடல் வழியாக சட்டவிரோதமாக குடியேறுவதற்கான வாய்ப்பு குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் மத அடிப்படைவாதிகள் தமிழ்நாட்டில் தளம் அமைப்பதைத் தடுக்க உளவுத்துறையை பலப்படுத்தவும் மாநிலம் முழுவதும் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த வாரம், தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக அல்கொய்தா, ஐ.எஸ். உள்ளிட்ட 11 குழுக்களை தடை செய்ய சட்டமா அதிபர் அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆறு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள

டுள்ளது.

இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடுமையான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.அத்துடன் கடுமையான இடிமுழக்கம் மற்றும் மின்னல் தாக்கம் இருக்குமெனவும் மக்களை அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சுமந்திரனைக் கொல்லச் சதித்திட்டம் 11 சந்தேக நபர்கள் விடுதலை!

நீதவான் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக வழக்கு தொடர்வதற்கு போதுமான சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் தரப்பினால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் யுத்தக் காலத்தில் வடக்கு, கிழக்கில் புதைத்திருந்த ஆயுதங்களை தென்பகுதிக்கு கடத்தி பாதாள குற்றக் கும்பல்களுக்கு விற்பனை செய்ததாகவும், சுமந்திரனை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாகவும் 2019 ஆம் ஆண்டில் 15 பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர். வத்தளை பகுதியில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்டட விசாரைணையை அடிப்படையாகக் கொண்டே இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது கனேமுல்லை சஞ்ஜீவ வேறு வழக்கொன்றில் விளக்கமறியலில் இருந்த நிலையில், பயங்காரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவரை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தமது பொறுப்பில் வைத்து விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில் இது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சந்தேக நபர்களில் 11 பேருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக போதுமான சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் அவர்களை விடுதலை செய்ய நீதிமன்றம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் மற்றைய நான்கு பேர் தொடர்பிலும் விரைவில் வழக்குத் தொடரப்படவுள்ளதாக சட்டமா அதிபரினால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி விநியோகம் தொடர்பில்

மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கப்படும் திகதி இடம் மற்றும் யார் அதற்கு தகுதிபெற்றவர்கள் குறித்த விபரங்கள் சிறிதளவே வெளியாகின்றன என தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் யாமினி மிஸ்ரா, இது தடுப்பூசியை பெற முயலும் மக்களிற்கு தடையாகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாக்கிஸ்தான் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கும் திட்டங்கள் குறித்த எந்த தகவலும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் தடுப்பூசிக்கான பெரும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக தேசிய அளவில் தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஈழத்தை ஏன் பயன்படுத்துகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும்

முன்னிலை சோசலிய கட்சியின் அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர், சிங்கள மக்களின் மனங்களை வென்று அவர்களின் வாக்குகளை பெறுவதற்காவே ஈழம் என்ற சொற்பதத்தை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்கிறது.

ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களின் போது தேர்தல் பிரசார மேடைகளில் ஈழம் என்ற சொல் பிரதான இடத்தை பிடித்திருந்தது. கொழும்பு துறைமுக நகரப்பொருளாதார ஆணைக்குழு உருவாகக்த்திற்கான சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.இலங்கைக்குள் பிறிதொரு நாட்டை உருவாக்கும் நோக்கில் இச்சட்டமூலம; முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியுடன் பாராளுமன்றத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான வர்த்தமானி மார்ச் மாதம் 24ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு நகரத்தை அமைக்கும் போது அனைவருக்கும் ஏற்படும் சந்தேகம் தான் எதற்காக கடலை நிரப்பி நகரமொன்று அமைக்கப்படுகின்றது என குறிப்பாக ஒரு நாட்டில் விசேட அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கும் போது அரசாங்கத்துக்கு சொந்தமான பழைய இடங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பர்.ஆனால் இலங்கையின் பூகோளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் புதிய நகரமொன்றை அமைப்பதற்காக பாரியளவில் சுற்றாடல் அழிக்கப்பட்டது. அன்று சுற்றாடல் அழிவை காரணம் காட்டியே பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இன்று இந்த துறைமுக நகரம் தொடர்பான எதிர்கால செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது குறித்து நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்று மார்ச் 19ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அனைவரும் இணக்கம் தெரிவித்ததையடுத்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவிற்கு 7 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதில் முதலீடு , நிதி, தகவல் தொழில்நுட்பம், சட்டம், பொறியியல் தொழிநுட்பம் , வர்த்தகம் அல்லது கணக்காய்வு உள்ளிட்ட விடயங்களில் நிபுணர்களே இந்த குழுவில் நியமிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டாலும் நியமிக்கப்பட்ட குழுவில் மத்திய வங்கி ஈநிதியமைச்சு உள்ளிட்ட நாட்டின் பிரதான நிறுவனங்கள் கூட இதில் உள்ளீர்க்கப்படவில்லை.

மாறாக ஜனாதிபதிக்கு தேவையானவர்களே ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.நாட்டின் பொது சட்டம் செயற்படுத்தப்படாத பிரதேசமாகவே இது விளங்கவுள்ளது.ஒரே நாடு ஒரே சட்டம என கூறி தேச வழமைச் சட்டம் ,முஸ்லிம் விவாகச் சட்டம் என்பவற்றை அடி'படையாக வைத்து பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.விவாகச்சட்டத்தில் வேறுபாடுகள் உள்ளதென கூச்சலிட்டவர்கள் இலங்கைளின் பொருளாதார கொள்கையை மீறும் வகையில் நிலமொன்று பெயரிடப்பட்டுள்ளதை தொடர்பில் அவதான் செலுத்தாமல் இருப்பது வேடிக்கையானது.

இலங்கை முதலீட்டு சபையின் விசேட ஏற்பாடுகள் சட்டமானது இந்த நகரத்தை நிதி நகரம் என்று கூறினாலும் கருப்பு பணத்தை வௌ'ளையாக்கும் நடவடிக்கையே இங்கு முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன் சூதாட்டம் ,கெசினோவும் மேம்படுத்தப்படவுள்ளது.மேலும் தொழிலாளர்களின் உரிமைககளை இரத்துச் செய்யும் இடமாகவும் இந்த நகரத்தின் செயற்பாடுகளில் நிதியமைச்சு மத்திய வங்கி நாடாளுமன்றம் தலையிடுவதற்கான அதிகாரம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்றார்.

## எந்த அரசியல்வாதிக்கும் ஹிட்லர் முன்மாதிரியில்லை

நான் ஒரு விடயத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மில்லியன் கணக்கான இறப்புகளுக்கும் கற்பனைக்கு அப்பாற்றபட்ட மனித துயரங்களுக்கும் விரக்திக்கும் காரணமாகயிருந்தவர் ஹிட்லர்.

எந்த அரசியல்வாதிக்கும் ஹிட்லர் நிச்சயமாக முன்மாதிரியில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சர்வாதிகாரி போன்று செயற்படுவார் என எதிர்பார்த்தே மக்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு வாக்களித்தனர் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஆனால் இன்று அவரது அரசாங்கத்தின் செயற்பாடின்மைக்காக மக்கள் அவரை குற்றம்சாட்டுகின்றனர் என இராஜங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஒரு ஹிட்லர் போல செயற்பட்டால் எவரும் குறைகூறமாட்டார்கள். குற்றம் சாட்டமாட்டர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அவ்வாறு செயற்படவிரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார் தற்போதைய நிலைமை மாறாவிட்டால் அது ஜனாதிபதி ஹிட்லராக மாறும் நிலையை உருவாக்கும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி



SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா - வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பை ஒன்றிணைத்து பாண்டிருப்பு பிரதேச செயலகத்தை உருவாக்க வேண்டும்

(நூருல் ஹுதா உமர்)

தேர்தல் காலம் வந்தால் கிழக்கில் அதிலும் குறிப்பாக கல்முனையில் பல பூதங்கள் வெளி வரும். அதில் முக்கியமான பூதம் கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்தல், பிரித்தல் என்ற பூதம். இந்த பூதத்தை தேர்தல் காலங்க ளில் கொண்டுவருவது அரசியல்வாதிகளே. இவர்களுக்குள் பேசிக்கொண்டுதான் இவ்வாறு மக்களை ஏமாற்றுகிறார்களா? என்ற சந்தேகம் மக்களிடம் தொடர்ந்தும் இருந்தே வருகிறது. கல்முனைக்கு ஒரு பிரதேச செயலகம் மட்டுமே போதுமானது, பாண்டிருப்பு, சேனைக்குடியி ருப்பை ஒன்றிணைத்து பாண்டிருப்பு பிரதேச செயலகத்தை உருவாக்க வேண்டும் என உலமா கட்சி தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித் தார்.



நேற்று திங்கட்கிழமை இரவு கல்முனை காரியாலயத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

தமிழீழ விடுதலை புலிகள் கோலோச்சிய 1987 ம் ஆண்டு காலத்தில் நூறு வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசம் என்று கூட பாராது இந் திய றோவின் ஆலோசனையுடன் இந்த பிரதேச செயலகத்தை துண்டாட முயற்சித்தார்கள். அதன் பின்னர் 1989 முதல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசி ன் ஆளுகையில் இருந்துவரும் கல்முனைக்கு அமைச்சராக இருந்த, பிரதியமைச்சராக இருந்த பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எந்த ஒரு உறுப்பினரும் தீர்வை பெற்றுத்தரவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நினைத்தால் இந்த பிரச்சினையை இலகுவாக தீர்த்திருக்க முடியும்.

மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்டால் இனவாதம், பிரதேசவாதம் வெகுவாக தலைதூக் கும் அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழர், முஸ்லிம் என்ற வாதங்களை கிளப்பி விட்டு ஊர்களுக்கிடையே வாதங்களை உண் டுபண்ணி தேர்தலை வெல்ல பல நாடகங்கள் அரங்கேறும். அவ்வாறான நாடகங்களையும், அந்த நாடகங்களை இயக்கும் அரசியல் கட்சி களையும் மக்கள் நிராகரிக்க வேண்டும். யார் முதலமைச்சர் ? தமிழரா அல்லது முஸ்லிமா என்ற கதைகளும் பேசுபொருளாக மாறும் இந்த விடயத்தில் மக்கள் தெளிவாக இருப்பது அவசி யமாகும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளி கட்சியான நாங்கள் அண்மையில் எங் களின் நிலைப்பாடுகள் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் பேசியுள்ளோம். கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் எங்களின் கட்சி கட்டாயம் போட்டியிடும்.

எமது நாட்டை ஆளும் ராஜபக்ஸக்கள் தேர்த லுக்கு முகம்கொடுக்க தயங்குபவர்கள் அல்ல. இந்த வருட இறுதிக்கு முன்னர் மாகாண ச பைகளுக்கான தேர்தல் நடைபெறும் சாத்தி யம் அதிகமாக உள்ளது. கடந்த நல்லாட்சி க்காரர்கள் சில சிறுபான்மை கட்சிகளையும் இணைத்துக்கொண்டு செய்த திருகுதாளங்களி னால் தேர்தலை இப்போது நடத்துவதில் சில சட்டசிக்கல்கள் இருக்கிறது. இருந்தாலும் அந்த தேர்தல் நடைபெறும். நாங்கள் மாகாண சபை கள் முறைமைக்கு எப்போதும் எதிரானவர்கள் இருந்தாலும் ஜனநாயக கடமையான தேர்தல் நடைபெற்றால் நாங்கள் ஆதரிக்க பின்நிற்க போவதுமில்லை.

கடந்த 4.5 வருடங்கள் காலத்தை வீணடித்த எதிராணியினருக்கு இப்போதுதான் ஞானம் வந்தது போன்று அரசை விமர்சிக்கிறார்கள். ஈஸ்டர் தாக்குதல் கைதை ஆரம்பித்தவர்கள் யார் என்பதை ஹக்கீம், முஜிபுர்ரஹ்மான், சஜித் போன்றோர்கள் மறந்து விட்டார்கள் போல. அவர்களின் நல்லாட்சியில் தான் முஸ்லிங்கள் குரானை எரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள், அரபு எழுத்துக்களை கண்டு நடுங்கினார்கள் என்பதை அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்பு கிறேன். முஸ்லிங்கள் அந்த காலப்பகுதியில் கஷ்டப்படும் போது புதினம் பார்த்துக்கொண் டிருந்த சஜித் இப்போது நல்ல பிள்ளை போன்று நடிக்கிறார். சமூகத்தை பற்றிய தெளிவில்லாமல் பொது வெளியில் கருத்து சொல்லும் மு.கா தலைவர் ஹக்கீம் அவர்கள் வழமைபோன்று இப்போதும் சம்பந்தமில்லாமல் பேசிக்கொண் டிருக்கிறார். ஸஹ்ரான் தொடர்பில் முஸ்லிம் சமூகம் அறிந்திருந்தால் அவர்களை அடியோடு இல்லாமலாக்கி சட்டத்தின் பிடியில் அவர்களை கொண்டு சேர்த்திருப்பார்கள். ஹக்கீம் குழப்ப வாதிகளுக்கு எப்போதும் பக்கபலனாக இருப் பதை வன்மையாக கண்டிக்கிறேன் என்றார்.

# பல்நோக்கு அபிவிருத்தி செயலணி ஊழியர்களின் ஒன்றுகூடல்





(நூருள் ஹுதா உமர்)

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் எண்ணத்தின் கீழ் உரு வான பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பயிற்சி பெரும் பயிற்சி யாளர்களின் ஒன்று கூடல் நேற்று பகல் நிந்தவூர் தனியார் விடு தியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாரா ளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம அதி தியாக கலந்து கொண்டு சாய்ந்தமருது நகரசபை கோரிக்கை, ஜனாஸா எரிப்பின் தாக்கம், மாகாண சபை தேர்தல் உட்பட சம கால அரசியல் நிலை தொடர்பில் நீண்ட உரையை நிகழ்த்தினார்

மேலும் இந்நிகழ்வில் தேசிய காங்கிரசின் சிரேஷ்ட பிரதித் தலைவர் டாக்டர் ஏ. உதுமாலெப்பை, இலங்கை பொதுச்சே வை ஆணைக்குழு உறுப்பினரும் சிரேஷ்ட நிர்வாக சேவை அதி காரியான ஏ.எல்.எம். சலீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், சாய்ந்தமருது ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபத்துள் கரீம், கல்முனை மாநகர சபை உறுப் பினர்கள், சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் செயலாளர், பொருளாளர் உட்பட நிர்வாகிகள், தேசிய காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

# வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் முக்கியமான வீதிகள் புனர் நிர்மாணம்

(ரக்ஸனா)

வீதி பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் நாடளா விய ரீதியில் இருக்கின்ற ஒரு லட்சம் கிலோ மீற்றர் வரையிலான வீதிப் புனரமைப்பின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பருத்திச்சேனை கிராமத்தில் உள்ள 1.7 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி, மற்றும் 2 கிலோ மீற்றர் நீளம் கொண்ட ஈச்சந்தீவு கண்ணகி அம் மன் கோவில் வீதிக்குரிய ஆகியவற்றுக்கான புனர்நிர்மாண வேலைகள் திங்கட்கிழமை(12) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இதன் போது கலந்து கொண்டு வீதியின் புணரமைப்பு வேலைகளை ஆரம் பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண பணிப்பாளர் சி வகுமார் மற்றும் பிரதான பொறியி யலாளர் பரதன் நிறைவேற்று பொறி யியலாளர் சசிநந்தன் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதா கர் மற்றும் மண்முனை மேற்கு பிர தேச சபை தவிசாளர் சண்முகராசா கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சி தொண் டர்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.



# நட்சத்திர கலைக்கூடத்தின் குறும் பட விருது விழா



(ந.குகதர்சன்)

நட்சத்திர கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் 'பெண்' குறும்பட விருது விழா 2021 வெற்றிகரமாக கொழும்பு இலங்கை மன்றத் தில் இடம் பெற்றிருந்தது. இதில் மட்டக்களப்புக்கு பெருமை சேர்க்கப்பட்டுள்ளது.

பெண் இயக்குனர்களை தேடும் பயணம் என்று நாம் எடுத்துக் கொண்ட ஒரு விடயம் பல பேரின் வாழ்வில் ஒரு புதிய அத்தியா யத்தை ஆரம்பித்து வைத்திருந்தது. இதன் வெற்றி விழாவை விருதுகளை வழங்கி கொண்டாடினோம்.


இதில் பெண் அவள் தேவதை பெண்மை யினை உயர்த்தும் நிழல் படமாக மட்டக் களப்பு கலைஞர்களின் ஒருங்கிணைப்பில் எஸ்.தமிழினியின் தயாரிப்பில் உருவான குறும் திரைப்படம் அகில இலங்கை ரீதியில் ஐந்தாம் இடத்தினை பிடித்துள்ளது .

கொழும்பில் இயங்கிவரும் நட்சத்திர கலைக்கூடத்தின் ஆதரவில் அகில இலங்கை ரீதியிலான குறும் பட விருது விழா கடந்த ஸ்ரீலங்கா பவுண்டேசன் மண்டபத்தில் இடம் பெற்றது.

ஆண்டாண்டுக்காலம் பெண்ணின் மகத் துவம் பெருமை கண்டு வியந்த நாம் பெண் களை கொண்டாடி மகிழ இணைந்திடுவோம் என்னும் தலைப்பில் இடம் பெற்ற அகில இலங்கை ரீதியிலான குறும்பட விருது விழா வில் மட்டக்களப்பு இளம் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட நிழல்களின் நிஜம் நிழற் படம் ஐந்தாவது இடத்தினை பிடித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இடம் பெற்ற உலக மகளிர் தினத்துக்காக இவ் குறும் படம் தயா ரிக்கப்பட்டது. இதில் பின்வருவோர் நடித் துள்ளனர். நடிகர்கள் தமிழினி, கல்யானி, பிரமானந்தி, துவாரகா, மிருகாஞ்சினி, குழந்தை நட்சத்திரம் தரங்கினி, துணை நடிகர் கள் சுஜன், சத்துரு, உதவி சிந்து, விருத்திகா, சது, ஒளிப்பதிவாளர் நிதர்ஜனன், தொகுப் பாளர் ஜனார்தன், இயக்குனர் தமிழினி ஆகி யோரின் ஒருங்கிணைப்பில் இவ் நிழற்படம் உருவாக்கப்பட்டது.

மட்டக்களப்பு இளம் கலைஞர்களால் உரு வாக்கப்பட்ட நிழல்களின் நிஜம் நிழற்படம் ஐந்தாவது இடத்தினை பிடித்துள்ளமையா னது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இவ்வெற்றிக்கு பெரிதும் பாடுபட்ட கலைஞர்களை மட்டக்களப்பு மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டு (பிலவ வருடம்) 2021

## 14.04.2021 புதன் அதிகாலை 01.39 மணிக்கு பரணி நட்சத்திர 2 ஆம் பாதத்தில் பிறக்கிறது.

**விஷு புண்ணியகாலம்: 13.04.2021 இரவு 9.39 மணி முதல் 14.04.2021 அதிகாலை 05.38 மணி வரை இப் புண்ணிய காலத்தில் மருத்து நீர் (சிரசில் விளாவிலையும் பாதத்தில் கடப்பரிலையும்) வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்**

### கை விஷேச நேரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 14.04.2021 | காலை | 09.09- 09.52 | பகல் 02.22 - 04.11 |
| 16.04.2021 | அதிகாலை | 04.16 05.17 | |
| 17.04.2021 | காலை | 07.49 9.00 | மாலை 03.04- 03.59 |

### புத்தாண்டுக்குரிய ஆடைகள்:


நீல, சிவப்பு பட்டாடை அல்லது நீல, சிவப்பு கரையமைந்த பட்டாடை

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்:

அஸ்வினி, பரணி, கார்த்திகை (01 ஆம் கால்), பூரம், உத்தரம் (2,3,4 ஆம் கால்கள்) அத்தம், சித்திரை (1,2 ஆம் கால்கள்) பூராடம்

| ராசி | ஆதாயம் | விரயம் | ஆரோக்கியம் | ஆரோக்கியம் இன்மை | சுகம் | துக்கம் |
|---|---|---|---|---|---|---|
| மேடம், விருட்சிகம் | 08 | 14 | 02 | 03 | 03 | 03 |
| ரிஷபம், துலாம் | 02 | 08 | 06 | 04 | 06 | 03 |
| மிதுனம், கன்னி | 05 | 05 | 01 | 01 | 06 | 06 |
| மகரம், கும்பம் | 14 | 14 | 01 | 06 | 03 | 03 |
| தனுசு, மீனம் | 11 | 05 | 06 | 04 | 06 | 03 |
| சிம்மம் | 02 | 14 | 03 | 00 | 03 | 05 |
| கடகம் | 05 | 11 | 05 | 01 | 03 | 03 |

## அனைவருக்கும் இனிய தமிழ் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிலை வாதம் முன்னிற்கின்ற கால கட்டத்தில் பெண் இலக்கியவாதிகள் மிக அரிதாகியுள்ளது







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பெண்ணிலை வாதம் முன்னிற்கின்ற இன்றைய கால கட்டத்தில் பெண் இலக்கியவாதிகள் மிகவும் அரிதாகத்தான் காணப்படுகின்றார்கள் என முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளரும் பொதுச் சேவை ஆணைக் குழு உறுப்பினருமான ஏ.எல்.எம் சலீம் தெரிவித்தார்.

சாய்ந்தமருது அஸ்மியா அஷ்ரப் எழுதிய சிறுகதை தொகுப்பான 'நிழலாய் அவள்' நூல் வெளியீட்டு விழா சாய்ந்தமருது றியாழுல் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது அதில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஷ்ரப் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய அவர்,

நான் பிரதேச செயலாளராக இருக்கின்ற போது அரச ஊழியர்களுக்கிடையிலே இடம்பெற்ற இலக்கியப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற ஓர் எழுத்தாளர் அஷ்ரப் என்றால் அது மிகையாகாது. நான் இருக்கின்ற போதே அவர் அந்தப் பரிசினைப் பெற்றுக்கொண்டார். அது மிகவும் சந்தோசமாக இருக்கிறது. அதே வழியிலேதான் அவரது மனைவி அஸ்மியா அஷ்ரப் 'நிழலாய் அவள்' என்ற சிறுகதைத் தொகுதியை இன்று வெளியிட்டு இருக்கின்றார்.

ஓர் எழுத்தாளர் ஒரு புத்தகத்தை வெளியிடுவது என்பது பிரசவத்துக்கு சமமானது. மிகவும் சிரமப்படுகின்ற வேதனையான விஷயம். அதிலும் குறிப்பாக அதனுடைய செலவுகள் மற்றும் இதர விடயங்களை பார்க்கின்ற போது அது பாரியதொரு வேலைத்திட்டமாக இருக்கின்றது.

அந்த வகையில் இந்த நூல் அதிலும் குறிப்பாக சிறுகதை நூல் வெளிவருவது பாரியதொரு முயற்சி யாகத்தான் நான் கருதுகிறேன். இந்த நூலை வெளியிடுவதிலே அவரது கணவர் நிழலாய் இருந்திருப்பார் என்று நினைக்கின்றேன். நிழலாய் அவள் என்ற அந்தப் புத்தகத்தின் பெயர் அவரது கணவருக்கு கூறியிருக்கலாம். அதாவது அஷ்ரப் செல்லுமிடமெல்லாம் 'அவள் நிழலாய்' இருப்பாள் என்பதன் அர்த்தமாக இந்தப் பெயரை வைத்திருக்கலாம் என நான் ஊகமாகக் கருதுகிறேன்.

இலக்கியத் துறையிலே பல பெண்கள் சாதனைகள் புரிந்தாலும் புத்தகங்கள் வெளிவருவது மிகவும் குறைவாக இருக்கின்றது. அந்த வகையில் இன்று வெளிவருகின்ற இந்த சிறுகதை நூல் காத்திரமான நூலாக இருக்கின்றது. இதனை அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் அஸ்மியா, தனது கணவரான எம்.ஐ.எம். அஷ்ரபிடம் கையளித்தார்.

இதுவே சாய்ந்தமருதில் பெண் எழுத்தாளரால் வெளியிடப்பட்ட முதலாவது சிறுகதை நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் பிரபல இலக்கியவாதிகளான பிரபல கலைஞர் அஸ்வான் மௌலானா மற்றும் பிரபல கவிஞர் என்.எம்.அலிக்கான் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தன.

இந்நிகழ்வில், முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி பீர் முஹம்மட், கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.எச்.ஏ பஷீர், ஆசிரியர் நவாஸ் சௌபி, பிரபல கவிஞர் கே.எம்.ஏ.அஸீஸ், மருதம் கலைக் கூடலின் தலைவர் அஸ்வான் சக்காப் மௌலானா, அதன் பிரதித் தலைவர் என்.எம். அலிக்கான் மற்றும் செயலாளர் ஊடகவியலாளர் ஸாகிர் உட்பட ஆசிரியர்கள், கல்விமான்கள், இலக்கியவாதிகள், நூலாசிரியரது குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மூதூர் பிரதேச சபையின் செயலாளருக்கு அம்பாறையில் கௌரவம்

(பொன்ஆனந்தம்)

மூதூர் பிரதேச சபையின் செயலாளராக பதவி உயர்வு பெற்ற செல்வி வீ. சத்தியசோதியை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தினால் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில் மூதூர் பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றும் செல்வி. வீ. சத்தியசோதி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சுப்ரா தரத்திற்கு பதவி உயர்வு பெற்றமைக்காக அவரது அர்ப்பணிப்புடனான சேவையை பாராட்டி அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம் எம் சித்தி பாத்திமாவினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



# வக்கியெல்லப் பாதையினை சீர் செய்யுமாறு பிரயாணிகள் கோரிக்கை

(இ.சுதாகரன் )

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலக நிருவாக எல்லைக்குட்பட்ட வக்கியெல்ல பிரதான வீதியானது புனரமைக்கப்பட்டு குறுகிய காலத்தினுள் சேதமடைந்து பிரயாணம் செய்ய முடியாதுள்ளதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரித்துடைய சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் கொண்ட தார் வீதியானது கனரக வாகனங்களின் போக்குவரத்து காரணமாக சேதமடைந்து குண்டும் குழியுமாக காணப்படுவதனால் பிரயாணம் செய்ய முடியாதுள்ளதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வெல்லாவெளி பிரதேசத்திலிருந்து வக்கியெல்ல செல்வதற்கு மிகவும் முக்கியமான வீதியாக குறித்த வீதியானது காணப்படுவதாகவும் இதனை துரிதமாக செப்பனிடுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரயாணிகள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.



# குழந்தையர் கொஞ்சுந்தமிழ் நூல் வெளியீடு!



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

புலவர் மணி ஏ.எம். அப்துல் கஹ்ஹார் எழுதிய 'குழந்தையர் கொஞ்சுந்தமிழ்' நூல் வெளியீடு, கிண்ணியா எறும்புகள் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில், கவிஞர் கஹ்ஹார் இல்லத்தில் நடைபெற்றது.

கவிஞர் எம்.எம்.அக்பர் சலீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் மற்றும் சிறப்பு அதிதிகளாக கிண்ணியா நகர சபையின் முன்னாள் தவிசாளர் டொக்டர் ஹில்மி மகரூப், நகர சபை உறுப்பினர்களான கௌரவ நாஸீக் மஜிட், எம்.ஏ.கலிபத்துள்ளாஹ் மற்றும் பேனா இலக்கியப் பேரவையின் பணிப்பாளர் எழுத்தாளர் ஜே.பிரோஸ்கான் ஆகியோர் கலந்துகொண்டனர்

# சவூதி அரேபிய அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பேரீச்சம் பழப் பொதிகள்

(ஏறாவூர் நிருபர்)

புனித றமழான் நோன்பு காலத்தையொட்டி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கிணங்க சவூதி அரேபிய அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி பேரீச்சம் பழப் பொதிகள் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினூடாக நாட்டின் சகல பாகங்களிலுமுள்ள பள்ளி வாயல்களுக்கு கையளிக்கும் நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன.

இதற்கமைவாக மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்திலுள்ள பள்ளிவாயல்களுக்கு பேரீச்சம் பழங்கள் வழங்கும் நிகழ்வு முகைதீன் பெரிய ஜும்ஆ பள்ளிவாயலில் நடைபெற்றது.

பொது ஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளர் என்எம். சுகைப் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பேரீச்சப்பழப்பொதிகளை பள்ளிவாயல் நிருவாகிகளிடம் கையளித்தார்.

பள்ளிவாயல் நிருவாக சபைத்தலைவர் முகமட் நழீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் பிரசன்னமாயிருந்தனர்.



# சட்டவிரோதமான முறையில் 19 சாராய போத்தல்களை கொண்டு சென்றவர் கைது

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் 19 சாராய போத்தல்களை கொண்டு சென்ற நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் முச்சக்கர வண்டியொன்றில் 19 போத்தல் சாராயத்தினை கொண்டு சென்ற போதே போதைப் பொருள் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் கந்தளாய் நகரிலிருந்து பேராறு பகுதிக்கு முச்சக்கர வண்டியில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு சென்ற போது 19 போத்தல் சாராயத்துடன் சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் பயன்படுத்திய முச்சக்கர வண்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

13,14,ஆம் திகதிகளில் மதுபான சாலைகளை திறக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



அருள்மிகு திருக்கோணேசப் பெருமானின் பிரமோற்சவத்தின் தேர் உற்சவம் நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.

படம்: பொன்ஆனந்தம்

# மட்டக்களப்பு கொம்புச்சந்திப் பிள்ளையார் பிரமோற்சவம்



இலங்கையின் மிக உயரமான 64 அடி விக்கிரக இராஜ கோபுரத்தையுடைய மட்டக்களப்பு தேற்றாத்தீவு அருள்மிகு கொம்புச்சந்தி பிள்ளையார் பேராலயம்பிரமோற்சவப் பெருவிழாவானது எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்தோற்சவத்துடன்முடிவடையவுள்ளது.

அந்த வகையில் முறையே புஸ்பாஞ்சலி திருவிழா கர்ப்பூரஜோதித்திருவிழா சதுர்வேத கோஷத் திருவிழா பஞ்சமுக அர்ச்சனை திருவிழாவும் திராவிட தோத்திர விழாவும் மாம்பழத் திருவிழாவும் வேட்டைத் திருவிழாவும் சப்பர திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

26.04. 2021 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தஉற்சவமும் திருபொன்னூஞ்சலும் மாலை கொடியிறக்கமும் இடம் பெறும். தீர்த்த உற்சவத்தின் போது அடியார்கள் பிதிர்கடன் செய்ய முடியும்.27.04. 2021 செவ்வாய்கிழமை பூங்காவனத்திருவிழாவும், 28.05. 2021 புதன்கிழமை வைரவர்பூஜையும் இடம் பெறும்

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஹ்ரானின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

## – மௌலவி முபாறக் அப்துல் மஜீத்

[பாறுக் ஷிஹான்]

சஹ்ரானின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இருந்து விட்டு சமூகத்தின் மீது பழிபோடுவதை ஏற்க முடியாது என உலமா கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைந்துள்ள உலமா கட்சி அலுவலகத்தில் திங்கட்கிழமை (12) இரவு 10 மணியளவில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில்,




சஹ்ரானின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இருந்து விட்டு சமூகத்தின் மீது பழிபோடுவதை ஏற்க முடியாது. காத்தான்குடி பகுதியில் குழப்பவாதியாக இருந்த சஹ்ரானுக்கு கைகொடுத்து தேர்தல்காலங்களில் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்ததை நாம் கண்டிருந்தோம்.

அவ்வாறு பிழைகளை செய்து விட்டு கூலிக்கு செயற்பட்ட சஹ்ரான் குழு உருவாகுவதற்கு சமூகம் உள்ளவர்கள் தான் காரணம் என கருத்துக்களை அவர் பரப்புவதை ஏற்கமுடியாது. இவரது பேச்சுக்களை பார்க்கின்ற போது அவருக்கு சரியான விளக்கங்கள் இருக்கின்றதா என்பது தெரியவில்லை.வழமையாகவே ரவூப் ஹக்கீம் பேசுகின்ற போது என்ன பேசுகின்றார் என்பது யாருக்கும் புரியாது என்றார்.

# அரச ஊழியர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள பாடத்தின் திறன் வெளிப்படுத்தல் இறுதி நிகழ்வு



[சர்ஜுன் லாபீர்]

அரச ஊழியர்களுக்கான 150 மணித்தியாலம் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் திறன் வெளிப்படுத்தல் இறுதி நிகழ்வு திங்கட்கிழமை கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பாடநெறியின் தலைவர் எம்.என்.எம் சசீர் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபிபுல்லா விசேட அதிதிகளாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம் ரம்சான், தலைமைப்பீட சமூர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்

சாலீஹ்,பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜனூ பா,சிங்கள பாட வளவாளர்களான ஆர் சிரீஸ் கந்தராஜா,பி.சந்திரகுமாரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# முள்ளிப்பொத்தானையில் சமுர்த்தி ‘அபிமாணி வியாபார சந்தை’



[ஹஸ்பர் ஏ ஹலீம்]

சமுர்த்தி அபிமாணி "அன்பான வணிகன் " சமுர்த்தி வியாபார சந்தையானது தமிழ் ,சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு முள்ளிப்பொத்தானை சமுர்த்தி வங்கியினால் திங்கள் காலை 08.30 மணியளவில் சமுர்த்தி திணைக் களத்தின் மாவட்ட பணிப்பாளர் திருமதி. எஸ். சுதீஸ்னர் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் திருமதி முஸம்மிலா ராபிக் தலைமையில் இடம் பெற்ற குறித்த சந்தை விற்பனை நிகழ்வில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் மற்றும் நஞ்சற்ற வீட்டுத் தோட்ட மரக்கறி வகைகளும் விற்பனை செய்யப்பட்டன.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள் ராஜ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இதில் தம்பலகாமம் பிரதேச சமுர்த்தி வங்கிச் சங்க உறுப்பினர்கள், பயனாளிகள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

# அடையாளம் காணாத சடலம் கைப்பற்றப்பட்ட தொலைபேசி யாருடையது?



[பாறுக் ஷிஹான்]

கால்வாய் ஒன்றில் மீட்கப்பட்ட ஆணொருவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக கல்முனை ஆதார வைத்தியசாலையின் சவச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) பிரதான வீதியோரத்தில் அமைந்திருந்த நீரோடும் கால்வாயில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் கிடப்பதாக பொதுமக்களின் தகவலின் பிரகாரம் சம்மாந்துறை பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தது.

சுமார் 35 முதல் 40 வரையிலான வயது மதிக்கத்தக்க இச்சடலம் கொலைசெய்யப்பட்டு போடப்பட்டதா அல்லது இயற்கை மரணமா அல்லது வாகன விபத்தினால் ஏற்பட்டதா? என பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த சம்மாந்துறை நீதிமன்ற பதில் நீதிவான் பார்வையிட்டிருந்தார்.

அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ள நிலையில் சடலத்தின் பக்கெட்டில் இருந்து கைத்தொலைபேசி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

# அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா வைபவம்




[சில்மியா யூசுப்]

பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் அமைச்சர் கௌரவ. சுசில் பிரேமஜயந்த கலந்துகொண்டார், விசேட அதிதிகளாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அவர்களும், மாலைதீவுக்கான தூதுவர் கௌரவ ஓமர் ரஸ்ஸாக் அவர்களும், பிரதித் தூதுவர் கௌரவ அஸ்லம் சாகிர் அவர்களும், சிறைச்சாலை ஆணையாளர் திரு மலின் லியனகே அவர்களும், முன்னாள் கொழும்பு மாகாண சபை அங்கத்தவர் மனித உரிமைகள் அமைப்பின் ஆளுநருமான எ.ஜே. மொஹமட் பாய்ஸ் அவர்களும், கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி திரு எஸ் சந்திரசேகரம் அவர்களுடன் பல உள்நாட்டு வெளிநாட்டு கல்விமான்களும் கலந்து சிறப்பித்தனர்.

பம்பலப்பிட்டி அமேசன் உயர்கல்வி நிறுவனமானது சுமார் 10 வருடங்களாக ஏனைய கல்வி நிறுவனங்களை விடவும் மாறுபட்ட முறையில் தனது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

அத்துடன் அமேசன் உயர் கல்வி நிறுவனமானது கல்வியோடு மட்டுமன்றி பல சமூக சேவைகளையும், பல இலவச புலமைப்பரிசில் திட்டங்களையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் உரையாட்டிய நிறைவேற்று பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார் எதிர்வரும் ஆண்டுகளில் உலகிலேயே அதிகமாக தேவைப்படுகின்ற தொழிற்துறையான Robertic Engineering, Green Technology, Solor Technology, Hybrid technology, Cloud Computing, Automated System, Mobile Technology, Wireless technology போன்ற துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகளையும் வெகுவிரைவில் ஆரம்பிக்க உள்ளது என தெரிவித்தார்.

இப் பட்டமளிப்பு விழாவில் சுமார் 140 மாணவர்கள் தங்களுடைய சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர்.

இதில் உளவியலும் உளவளத்துணையும், ஆசிரியர் பயிற்சி நெறி,

தகவல் தொழில்நுட்பம், கணக்கியல், இதுபோன்ற பல துறைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கல்வி மறுசீலமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் அமைச்சர் கௌரவ. சுசில் பிரேமஜயந்த அவருடைய உரையில் எமது நாட்டிலுள்ள பல வளங்களை இன்னும் சரியாக நிர்வகிக்க முடியாத நிறை காணப்பட்டு வருகிறது என்றும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டுக்கு புதிய துறைகளை கற்ற துறை சார்ந்தவர்கள் அதிகளவில் தேவைப்படுகிறார்கள்.

இதனை அரசாங்கத்தினால் மற்றும் செய்துவிட முடியாது எனவும்

இன்று இலங்கையின் பொருளாதார கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்கினை தனியார் துறையை துறையினரே வழங்கி வருகின்றனர் என்றும்

அந்த வகையில் அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் சேவை உண்மையில் பாராட்டத்தக்கது என்றும் தன்னுடைய உரையை வழங்கி சென்றார்.

இதில் பங்கேற்ற அனைத்து அதிதிகளுக்கும், சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கும்,மற்றும் சிறந்த விரிவுரையாளர்களுக்கும் , இணை நிறுவனங்களுக்கும் விசேட நினைவுச்சின்னம் அமேசன் உயர் கல்வி நிறுவத்தின் நிறைவேற்று பணிப்பாளர் திரு இல்ஹாம் மரைக்கார் அவர்களினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சித்திரைப் புத்தாண்டுக்காக 5000 ரூபா வழங்கும் திட்டம்



(பாறுக் ஷிஹான்)

கொவிட் 19 காரணமாக பாதிக்கப்பட்டு வருமானத்தை இழந்த குடும்பங்களின் சித்திரைப்புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் பொருளாதார புத்தெழிச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் சுற்று நிருபத்திற்கு அமைவாக 5000 ரூபா வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைவாக சமுர்த்தி வங்கிகளினூடாக வழங்கப்படும் இப்பணம் ஆறு கட்டங்களாக வழங்கப்படவுள்ளது.இதன் அடிப்படையில் முதற்கட்டமாக சமுர்த்தி பயனாளிகளுக்கான 5000 ரூபா கொடுப்பனவு நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவிலும் பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதனின் கண்காணிப்பின் கீழ் நேற்று (13) சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்காக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகை நாவிதன்வெளி மற்றும் மத்தியமுகாம் வங்கிகளின் மூலமும் நடமாடும் வங்கிச்சேவை மூலமும் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

இக்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் கே.ரிஸ்வி யஹ்சர், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ். சிவம், சமூர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எச். எம்.ஏ அலீம், சவளக்கடை சமூர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.ஜினேந்திரன், மத்தியமுகாம் சமூர்த்தி வங்கி முகாமையாளர் தமிழ்வாணன் உட்பட சமுர்த்தி திணைக்களத்தின் தொழில்நுட்ப பிரிவு உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இக்கொடுப்பனவை தொடர்ந்து சமுர்த்தி பெற தகுதியானவர்கள் முதியோர்கள் நோய்பாதிப்புக்குள்ளானவர்கள் உபகுடும்பம் மற்றும் மேன்முறையீட்டின் மூலம் பெறுகின்றவர்கள் என அனைவருக்கும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும்





(றாசிக் நபாயிஸ், எஸ்.கார்த்திகேசு)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நேற்று சாய்ந்தமருது வெலிவோறியன் கிராமத்திலுள்ள எம்.எஸ் காரியப்பர் வித்தியாலயத்தில் அமைப்பின் தலைவர் கலாபூசணம் மீரா.எஸ். இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது புதிய நிர்வாகக் குழுவில் மருதமுனையைச் சேர்ந்த கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் தலைவராகவும், சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ.ஜே.எம்.கனிபா செயலாளராகவும், கல்முனையைச் சேர்ந்த யூ.எல்.எம்.இஸ்ஹாக் பொருளாளராகவும், சிரேஷ்ட ஆலோசகர்களாக கலாபூஷணம் மீரா.எஸ்.இஸ்ஸடீன், கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம் மற்றும் எம்.எல்.எம். ஜமால்டீன் என

முன்னைய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உட்பட அனைவரும் ஏகமானதாக முன்னைய தலைவரின் தத்துணிவுக்கு கட்டுப்பட்டு அனைவரின் சம்மதத்துடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இதன் போது ஊடகவியலாளர்களான சிலோன் மீடியா போரத்தின் தலைவர் றியாத் ஏ மஜீத், எஸ்.கார்த்திகேசு மற்றும் பி.முகாஜரீன் போன்றோர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர்களால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org